# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590**

<u>ஆணை நாள் 25.09.2019</u>

**<u>முன்னிலை</u>**

## முனைவர் ரா.பிரதாப்குமார்

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 3265/B/2018</u>**

திரு. M.யுவராஜ் — மேல்முறையீட்டாளர்

எதிர்

பொதுத் தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
குடியாத்தம்,
வேலூர் மாவட்டம் — பொது அதிகார அமைப்பு

## <u>ஆணை</u>

இந்த விசாரணையானது இவ்வாணையத்தால் ஏற்கனவே 16.07.2019 அன்று நடத்தப்பட்ட விசாரணையின் தொடர்ச்சியாக இன்று (25.09.2019) நடத்தப்படும் மறுவிசாரணையாகும். இன்றைய மறுவிசாரணைக்கு மனுதாரர் திரு. M.யுவராஜ் அவர்கள் ஆஜரானார். திரு. எஸ். சரவணன், சார் ஆட்சியரின் நேர்முக உதவியாளர், வேலூர் மாவட்டம் மற்றும் பொதுத் தகவல் அலுவலர், திரு எம். நெடுமாறன், வட்ட வழங்கல் அலுவலர், குடியாத்தம் வட்டாட்சியர் அலுவலகம், வேலூர் மாவட்டம் அவர்கள் இன்றைய விசாரணைக்கு ஆஜரானார்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 30.01.2018 தேதியிட்ட மனுவில், வாரிசு சான்று எண் 175/2002ன் பேரில் வாரிசு சான்று கோரிய விண்ணப்பம் மற்றும் அதனுடன் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள், விண்ணப்பத்தின் பேரில் விசாரணை செய்து விசாரணையின் பேரில் தங்களது துறை சார்ந்த அலுவலர்களால் பரிந்துரைக்கப்பட்ட தகவல்கள் சம்பந்தமாக தகவல் கோரி வேலூர் மாவட்டம், குடியாத்தம்

வட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு மனு செய்துள்ளார். தமக்கு தகவல் கிடைக்கப் பெறாததால் மனுதாரர், தான் கோரியுள்ள தகவல்களை தனக்கு பெற்றுத் தருமாறு தெரிவித்து 16.03.2018 தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டாட்சியர் அலுவலக மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பி வைத்துள்ளார். மேல்முறையீட்டு மனுவிற்குப் பின்னும் தகவல் கிடைக்கப் பெறாததால் மனுதாரர் 30.04.2018 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (16.07.2019) இவ்வாணையத்தால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, வழக்கின் மறுவிசாரணை கீழ்க்கண்ட ஆணைகளுடன் மறுதேதி குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டிருந்தன:-

> "மனுதாரரின் 30.01.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரியுள்ள தகவல்கள் தொடர்பாக, வேலூர் சார் ஆட்சியர் அவர்கள், குடியாத்தம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வருகை தந்து, மனுதாரர் கோரியுள்ள தகவல் அடங்கிய ஆவணங்களை தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 18(3)(b)ன்கீழ் ஆய்வுசெய்து, குடியாத்தம் வட்டாட்சியர், தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர் / பொதுத் தகவல் அலுவலர் மற்றும் மனுதாரரையும் விசாரணைக்கு அழைத்து, விசாரணை மேற்கொண்டு, விசாரணை அறிக்கையை வேலூர் சார் ஆட்சியர் அலுவலகப் பொதுத் தகவல் அலுவலர் மூலம் இவ்வாணை கிடைக்கப் பெற்ற 10 நாட்களுக்குள் சட்டப்பிரிவு 7(6)ன்படி கட்டணமின்றி ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவுத் தபாலில் அனுப்பி வைத்து, மனுதாரர் ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலுடன் மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவலையும் இணைத்து ஒரு அறிக்கையாக தயார் செய்து, இவ்வாணையத்தில் நடைபெறும் மறுவிசாரணையன்று நேரிடையாக ஆஜராகி சமர்ப்பிக்க ஆணையம் உத்தரவிட்டிருந்தது. அத்துடன் மனுதாரரின் 30.01.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1) மனு மற்றும் பொதுத் தகவல் அலுவலர் குடியாத்தம் வட்டாட்சியர் அலுவலகம் கொடுத்த 08.07.2019 தேதியிட்ட தகவலின் நகல்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்பட்டிருந்தது".

3. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய தகவல்கள் மனுதாரருக்கு வழங்கப்பட்டது என்று தெரிவித்து, அதன் நகல்களை ஆணையத்தில் சார்வு செய்தார். மேலும், மனுதாரர் திரு.எம். யுவராஜ் என்பவர் ரத்து செய்யக் கோரும் வாரிசு சான்று நி.மு.எண் 175/2002 என்பது, மனுதாரரின் சித்தி லேட் திருமதி. ருக்மணி என்பவரின் இறப்பிற்காக பெறப்பட்டுள்ள வாரிசு சான்று என்றும், மேற்படி வாரிசு சான்று குடியாத்தம் வட்டாட்சியர் அலுவலகத்தில் வழங்கப்படவில்லை என்றும், மேற்படி வாரிசு சான்று குடியாத்தம் வட்டாட்சியர் அலுவலகம் மூலம் வழங்கப்படவில்லையாதலால், இதனை ரத்து செய்ய இயலாததென்பதால், மனுதாரர் தமது தந்தையின் இறப்பு சான்று மற்றும் இதர ஆவணங்களுடன் லேட் திரு மார்கபந்துவின் இரண்டாவது மனைவி ருக்மணியின் மக்கள் திரு.தரணி மற்றும் திருமதி.பரிமளா ஆகியோர் இணைந்து லேட் திரு மார்கபந்து என்பவருக்கு வாரிசு சான்று பெற online மூலம் விண்ணப்பம் செய்து பெற்று கொள்ள வேண்டும் என்றும், தெரிவித்து, இந்த இரண்டாம் மேல்முறையீட்டின் மீதான விசாரணையை முடித்து கொள்ளுமாறு ஆணையத்திடம் கேட்டு கொண்டார்.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், தான் முதல் மனைவியினுடைய ஒரே வாரிசு என்றும் போலி வாரிசு சான்றை பயன்படுத்தி, தன்னுடைய தந்தையினுடைய

இரண்டாம் மனைவியின் வாரிசுகளான 6 பேருக்கு சொத்துக்கள் பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது என்றும், முதல் மனைவியினுடைய ஒரே வாரிசான எனக்கு அதில் எந்த பாத்தியமும் இல்லை என்றும் தெரிவித்து, தான் கோரியுள்ள தகவல்களை ஆணையம் தான் பெற்று தர வேண்டும் என்று வேண்டி கொண்டார்.

5. மேற்காணும் சூழ்நிலையில் இன்றைய விசாரணையில் முடிவில் கீழ்க்கண்ட ஆணைகள் வழங்கப்படுகின்றன:-

1. மனுதாரரின் 30.01.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரியுள்ள திரு. M.யுவராஜ் அவர்களுக்கு வழங்கப்பட்ட தகவல்கள் தொடர்பாக, வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் போலி வாரிசு சான்று குறித்து விசாரணை மேற்கொள்வதால் மனுதாரருக்கு உரிய தகவல்கள் கிடைக்கபெறும் என்று ஆணையம் கருவதால், மாவட்ட ஆட்சியரின் விசாரணைக்கு சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் மனுதாரரையும் அழைத்து விசாரணை மேற்கொண்டு மனுதாரர் கோரியுள்ள தகவல் அடங்கிய ஆவணங்களை தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 18(3)(b)ன்கீழ் ஆய்வுசெய்து, விசாரணை அறிக்கையை வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகப் பொதுத் தகவல் அலுவலர் மூலம் இவ்வாணையத்தில் நடைபெறும் மறுவிசாரணையன்று நேரிடையாக ஆஜராகி சமர்ப்பிக்க மாவட்ட ஆட்சியரை ஆணையம் கேட்டுக்கொள்கிறது.

   வழக்கின் மறுவிசாரணை பிறிதொரு தேதிக்கு மாற்றி வைக்கப்படுகிறது. நாளும், நேரமும் பின்னர் அறிவிக்கப்படும். அன்றைய தின விசாரணைக்கு இவ்வழக்கு சம்பந்தப்பட்ட அனைத்து அலுவலர்களும் ஆஜராக ஆணையம் உத்திரவிடுகிறது.

**ஒம்/-ரா.பிரதாப்குமார்**
**மாநில்த் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 3265/B/2018</u>**

மாவட்ட ஆட்சியர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
வேலூர் மாவட்டம்

சார் ஆட்சியர்,
சார் ஆட்சியர் அலுவலகம்,
வேலூர் மாவட்டம்

வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
குடியாத்தம்,
வேலூர் மாவட்டம்

பொதுத் தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
குடியாத்தம்,
வேலூர் மாவட்டம்

திரு. M.யுவராஜ்,
த/பெ. K.மார்கபந்து (லேட்),
எண்.23A/95, பஸ்வேஸ்வரா தெரு (எ)
போடிப்பேட்டை ரோடு,
புவனேஸ்வரிபேட்டை,
குடியாத்தம் வட்டம்,
வேலூர் மாவட்டம் - 632 602

Copy to: File / Stock File
SC/PA/30.09.2019